[2022] 11 S.C.R. 203

ஜி.என்.ஆர். என்கிற எஸ். என். பாபு

எதிர்

மருத்துவர். பி.சி. முத்தப்பா மற்றும் மற்றவர்கள்

(உரிமையியல் மேல்முறையீட்டு எண். 6228 / 2022)

செப்டம்பர் 06, 2022

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அபே எஸ். நீதிமன்றத்தின் தீர்ப்பை வழங்கியவர்

மாண்புமிகு நீதியரசர் திரு. அபேய் எச். ஓகா

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908– பிரிவுகள் 96, 105 & கட்டளை 9 விதி 13 – பிரதிவாதிகளுக்கு எதிரான தோன்றாத்தரப்பினர் தீர்ப்பாணை – பிரிவு 96–ன் கீழ் மேல்முறையீடு– தீர்ப்பின் நோக்கெல்லை (Scope of adjudication) – 1ம் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மேல்முறையீட்டாளர் / பிரதிவாதிக்கு எதிராக தோன்றா தரப்பினருக்கான தீர்ப்பாணை வழங்கப்பட்டது– உயர்நீதிமன்றமானது பிரிவு 96 ன் கீழான மேல்முறையீட்டில், தகுதியின்

அடிப்படையில் தீர்ப்புரையினை உறுதி செய்கின்ற பொழுது, அழைப்பாணை வழங்க தவறியது குறித்த பிரச்சனையை தோன்றாத் தரப்பினர் உத்தரவை நீக்கரவு செய்யுமாறு கட்டளை 9 விதி 13–ன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்யமுடியும் என்பதே மேல்முறையீட்டாளரின் வாதுரை – சரி தன்மை – முடிவு : தோன்றாத் தரப்பினர் அடிப்படையில் வெளியான தீர்ப்புரையை மேல்முறையீட்டை தாக்கல் செய்வதன் வாயிலாக மேற்முறையீட்டாளர் எதிர்க்கும் போது, அவருக்கு எதிரான ஒருதலைப் பட்ச நடைமுறைக்கான உத்தரவு சட்ட விரோதமானது என்று, விசாரணை நீதிமன்ற பதிவுகளைச் சுட்டிக்காட்ட முடியும். – விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதற்கான தகுந்த காரணம் உள்ளதை ஊர்ஜிதம் செய்யும்வகையில் மேல்முறையீட்டில் சான்றாதாரத்தை தாக்கல் செய்ய அவருக்கு உரிமை இல்லை என்றாலும், அறிவிப்பு சார்வாகி இருந்தாலும், சார்வாகாவிடினும் வழக்கு பதிவுகளின் அடிப்படையில் அவர் எப்போதும் வாதிடலாம், அவருக்கு எதிரான தோன்றாத் தரப்பினர் நடைமுறையை விசாரணை நீதிமன்றம் நியாயப்படுத்தவில்லை (the trial court was not justified in proceeding ex–parte against him) – பிரதிவாதியின் கட்டளை 9 விதி 13–ன் கீழான விண்ணப்பாமனது தள்ளுபடி செய்யப்படுகையில்; பிரதிவாதி ஒருதலைப் பட்ச உத்தரவிற்கு எதிராக பிரதிவாதி கிளர்ச்சி செய்ய இயலாது;

வழக்கு ஒருதலைப் பட்ச நடைமுறைப்படி தொடர்வது சட்டத்திற்கு முரணானது அல்லது சரியற்றது – எது எவ்வாறு இருப்பினும், மேல்முறையீட்டாளரால் கட்டளை 9 விதி 13–ன் கீழ் விண்ணப்பாமனது தற்போது வரை தாக்கல் செய்யப்படவில்லை, ஆகவே, அவரால் முன்வைக்கப்பட்ட வாதம் – மேலும், மேல்முறையீட்டாளருக்கு எதிராக சங்கதிகளின் அடிப்படையில் தோன்றாத் தரப்பினர் நடைமுறை தொடர அவசியம் ஏற்படப்பவில்லை – விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை மட்டுமின்றி எதிர்ப்புக்குள்ளான உயர்நீதிமன்ற உத்தரவுரம் நீக்கரவு செய்யப்படுகிறது – கூடுதலாக, வேண்டுதலில் காணப்படும் சங்கதிகளின் அடிப்படையில் வழக்கை திரும்ப நடத்த ஏற்றுக்கொள்ளப்படுகிறது (remand of the suit is accepted) – 1ம் எதிர் மேல்முறையீட்டாளருக்கு ரூ.2,00,000/– ஐ மேல்முறையீட்டாளர் செலுத்த பணிக்கப்படுகிறார் – அசல் வழக்கு மீட்டளிக்கப்படுகிறது..

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 – பிரிவு.105 –முடிவு: பிழை, குறைபாடு அல்லது வரிசைப்படுத்தப்பட்டதில் ஒழுங்கின்மை ஆகிய அடிப்படையில், பிரிவு 105 கீழ் ஒரு தீர்ப்புரை ஆனது மேல்முறையீடு செய்யப்படுகையில், மேல்முறையீட்டு மனுவில் எதிர்க்கப்படுவதற்கான அடிப்படை காரணமாக குறிப்பிடப்படலாம் – உரிமையியல் நடைமுறைச்

சட்டம், 1908 –கட்டளை 5 விதி 17 – தேவை – நிறைவேற்றாத – மேல்முறையீட்டாளருக்கு எதிராகா ஒருதலைப் பட்ச்ச தீர்ப்பாணை வெளியிடப்பட்டது மற்றும் அழைப்பாணைகள் சார்வாகியும் 2ம் பிரதிவாதி ஆஜராகவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்படுகிறது – முடிவு: பதிவேடுகளின் படி, மேல்முறையீட்டாளரின் வளாகம் (Premises) பூட்டப்பட்டு இருந்ததால் அழைப்பாணைகள் சாதாராண வகையில் சார்வு செய்யும் முயற்சிகள் தோல்வியடைந்தன.– கட்டளை 5 விதி 17–ன் படி; மேல்முறையீட்டாளர் வசித்து வரும் வீட்டின் வாயிற்கதவில் அழைப்பாணையின் நகலை ஒட்டுமாறு விசாரணை நீதிமன்றம் உத்தரவிடவில்லை – வழக்கின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட மேல்முறையீட்டாளரின் முகவரி சரியா என பரிசோதனை செய்யாமல், பதிவுத் தபால் வாயிலாக ஒப்புதல் அட்டையுடன் அழைப்பாணை சார்வு செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது – தீர்ப்பாணை நீக்கரவு செய்யப்படுகிறது.

மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்த நீதிமன்றம் முடிவு செய்ததாவது :

1.1 இந்த வழக்கில், கட்டளை 9 விதி 13–ன் கீழ் பிரதிவாதி எப்போது பரிகாரம் கோரவில்லை என்பது வினா, விசாரணை நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டாளருக்கு எதிராக தோன்றாத் தரப்பினர் நடைமுறையை பின்பற்ற நியாயமான காரணம் இல்லை என்று தீர்ப்புரைக்கு எதிரான வழக்கமான மேல்முறையீட்டில் கேள்வி எழுப்ப வாய்ப்புள்ளதா. அந்நிலையில், விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதற்கான தகுந்த காரணம் உள்ளதை ஊர்ஜிதம் செய்யும்வகையில் ஆதாரத்தை மேல்முறையீட்டில் முன்னிலைப்படுத்த மேல்முறையீட்டாளர் உரிமை இல்லை என்றாலும், அறிவிப்பு சார்வாகி இருந்தாலும், சார்வாகாவிடினும் வழக்கு பதிவுகளின் அடிப்படையில் அவர் எப்போதும் வாதிடலாம், அவருக்கு எதிரான விசாரணை நீதிமன்றத்தின் தோன்றாத் தரப்பினர் நடைமுறை நியாயப்படுத்தவில்லை (the trial court was not justified in proceeding ex parte against him). பிரிவு 105–ன் கீழ் அதற்கான காரணம், தீர்ப்புரையானது மேல்மூறையீடு செய்யப்படுகையில், பிழைகள் ஏதும், குறைபாடு அல்லது உத்தரவில் வழக்கின் முடிவை பாதிக்கும் வகையிலான ஏதேனும் ஒழுங்கினமை குறித்து மேல்முறையீட்டின் அடிப்படை குறிப்புரையில் சுட்டிக்காட்டலாம். அதன் படி, அந்நிலையில், வழக்கு நிலுவையில் உள்ள போது வழங்கப்படும் இடைக்கால உத்தரவு, வழக்கின்

முடிவிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது, அது சட்ட முரணானது என்று மேல்முறையீட்டில் வலியுறுத்தலாம் என்று மேல்முறையீட்டில் வலியுறுத்தலாம். ஆகவே, மேல்முறையீட்டாளர், ஒருதலைபட்ச தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு தாகல் செய்கையில், எப்போது வேண்டுமானாலும் மேல்முறையீட்டாளருக்கு எதிரான விசாரணை நீதிமன்றத்தின் ஒருதலைபட்ச நடைமுறைக்கான உத்தரவு சட்டமுரணானது என்று வழக்கு தரவுகளின் அடிப்படையில் சுட்டிக்காட்டலாம். பானு குமார் ஜெயின் வழக்கின் முடிவின் படி, பிரதிவாதியின் கட்டளை 9 விதி 13–ன் கீழான விண்ணப்பாமனது தள்ளுபடி செய்யப்படுகையில்; பிரதிவாதி ஒருதலைப் பட்ச உத்தரவிற்கு எதிராக பிரதிவாதி கிளர்ச்சி செய்ய இயலாது; வழக்கு ஒருதலைப் பட்ச நடைமுறைப் படி தொடர்வது சட்டத்திற்கு முரணானது அல்லது சரியற்றது. எது எவ்வாறாயினும், இவ்வழக்கில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை விதி 13–ன் கீழ் மேல்முறையீட்டாளர் மனு தாக்கல் செய்யவில்லை. ஆகவே, அவரால் முன்வைக்கப்பட்ட வாதம். [பத்தி 8][210–F–H; 211–A–C]

பானு குமார் ஜெயின் எதிர் அர்ச்சனா குமார் மற்றும் ஒருவர்

(2005) 1 SCC 787 : [2004] 6 Suppl. SCR 1104 – சார்ந்துள்ளது.

1.2 கையில் உள்ள வழக்கின் பொருண்மைகளின்படி, 27/அக்டோபர்/2014 தேதியிட்ட உத்தரவுத் தாளின் குறிப்புகளின் படி, மேல்முறையீட்டாளருக்கும் 2ம் எதிர் மேல்முறையீட்டாளருக்கும் அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் ஆனது, "அவர்களது வீட்டுக் கதவு பூட்டப்பட்டுள்ளது" என்ற குறிப்புடன் சார்வாகமல் திரும்பியுள்ளது என்பதை கண்டறிய இயலுகிறது. எது எவ்வாறு இருப்பினும், ஒப்புகை அட்டையுடனான பதிவு அஞ்சல் வாயிலாக அழைப்பாணைகளை அதே முகவரிக்கு அனுப்புமாறு 5/ஜனவரி/2015 அன்று விசாரணை நீதிமன்றமானது உத்தரவிட்டுள்ளது. 5/மார்ச்/2015 தேதியிட்ட உத்தரவுத் தாளின் பதிவுகள் படி, மேல்முறையீட்டாளருக்கும் 1ம் எதிர் மேல்முறையீட்டாளருக்கும் அனுப்பப்பட்ட தபால் வாயிலான அழைப்பாணைகள் ஆனது, "தகவல் சார்வு செய்யப்பட்டது" என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது. மேல்முறையீட்டாளரின் இடம்(Premises) பூட்டப்பட்டு இருந்ததால் அழைப்பாணைகள் சாதாராண வகையில் சார்வு செய்யும் முயற்சிகள் தோல்வியடைந்தன என பதிவேடுகள் சுட்டிக்காட்டுகின்றன. கட்டளை 5 விதி 17–ன் படி; மேல்முறையீட்டாளர் வசித்து வரும் வீட்டின் வெளிப்புற கதவில் அழைப்பாணையின் நகலை ஒட்டுமாறு விசாரணை நீதிமன்றம் ஏவுரை பிறப்பிக்கவில்லை.

மேல்முறையீட்டாளர் முகவரி காண்பிக்கப்பட்டபடி சரியானதா என சரிபார்க்காமல், ஒப்புகை அட்டையுடன் தபால் வாயிலான அழைப்பாணை சார்வு செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேல்முறையீட்டாளருக்கு எதிரான ஒருதலை பட்ச நடைமுறை பின்பற்றப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதுமட்டுமின்றி, வழக்குச் சொத்தில் தரை தளம் கூடுதலாக 4 தளங்களை கொண்ட பல அடுக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும், மற்றையத் தரப்பினர்கள் வாயிலாக வழக்குச் சொத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு பகுதிகளில் வெவ்வெறு நபர்களின் அனுபோகத்தில் உள்ளது என்பது அறியப்படுகிறது. முன்பே கவனத்தில் கொண்டபடி, வழக்குச் சொத்தில் உள்ள கட்டிடத்தை இடிக்குமாறு தீர்ப்பாணையானது பகரப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்திற்கே திரும்ப அனுப்ப நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதற்கு அதுவும் ஒரு அவசியமான காரணமாகும். இவ்வழக்கானது 2014ம் ஆண்டில் துவங்கியது. வழக்கை விசாரணை நீதிமன்றத்திற்கே திரும்ப அனுப்ப உத்தரவிடுவதன் விளைவாக, 1ம் பிரதிவாதியால் துவங்கப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட கால விரையம் ஏற்படலாம். ஆகவே மேல்முறையீட்டாளருக்கு கணக்கீடுகளின் படி ரூ.2,00,000/– (இரண்டு லட்ச ரூபாய்) கட்டணமாக விதிக்கப்படுகிறது. கட்டிடத்தில் வசிப்பவர்கள்

இவ்வழக்கின் அவசியமான தரப்பினரா என்று நாங்கள் எவ்வித குறிப்பும் செய்யாவிடினும், வழக்குச் சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் அனுபோகத்தில் உள்ள நபர்களை தரப்பினராக சேர்க்க 1ம் பிரதிவாதி விரும்பினால்; அது தொடர்பான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். எதிர்பிற்குள்ளான உயர்நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் உத்தரவு மட்டுமின்றி எதிர்பிற்குள்ளான பெங்களூர் மாநகர உரிமையியல் நீதிமன்ற கற்றறிந்த நீதிபதியின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஆகியன நீக்கரவு செய்யப்படுகின்றன. பெங்களூர் மாநகர உரிமையியல் நீதிமன்ற கோப்பிற்கு அசல் வழக்கு எண்.6610 /2014 ஆனது மீட்டெடுக்கப்பட்டது. 1ம் எதிர் மேல்முறையீட்டாளர் கணக்கீடுகளின் படி ரூ.2,00,000/- (இரண்டு லட்ச ரூபாய்) செலவுத் தொகையை மேல்முறையீட்டாளரிடம் இருந்து பெற உரிமையுடையவர். மேற்படி நிபந்தனைகள் படி கட்டணம் செலுத்தப்பட வேண்டும். இந்த செலவுத் தொகை செலுத்த வேண்டுறுத்தல் ஆன முன் நிபந்தனையாக இருக்கும் (The payment of costs shall be the condition precedent). [பத்திகள் 9–11, 13] [211–D–H; 212–A–C, F]

பிவ்சந்த்ரா சங்கர் மோர் v. பாலு கங்காராம் மோர் மற்றும் மற்றவர்.
(2019) 6 SCC 387 : [2019] 7 SCR 298 – குறிப்புற்றது.

பார்வையுற்ற வழக்குகள்

[2004] 6 சப்ளி எஸ்சிஆர். 1104 சார்ந்தது ...பத்தி 6

[2019] 7 எஸ்சிஆர். 298 குறிப்புற்றது ...பத்தி 6

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீட்டு எண். 6228/2022.

கர்நாடக உயர்நீதிமன்றம், பெங்களூர்: R.F.A.No.494 of 2016–ல் 22,மார்ச் 2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிற்கு எதிராக.

மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் : திரு. ஆனந்த் சஞ்சை எம்.நுலி, திரு. தர்ம் சிங், திரு. சூரஜ் கௌஷிக், திரு. நந்தா இ குமார் கே.பி. தி/ள் நுலி மற்றும் நுலி.

எதிர் மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர்கள்: திரு. அர்விந்த் காமத், மூத்த வழக்கறிஞர், திரு. ஷிவ்ராம் ஜஸ்ரா, திரு. பார்கவா வீ. தேசாய், செல்வி சாரு மோதி, திரு. எஸ்.கே.குல்கர்னி, திரு. எம்.கிரீஷ் குமார், திரு. அன்குர் எஸ்.குல்கர்னி, செல்வி உதிதா சக்ரவர்தி.

நீதிமன்றத்தின் தீர்ப்பை வழங்கியவர் – மாண்புமிகு நீதியரசர் திரு. அபேய் எச். ஓகா அவர்கள்.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர், அசல் முதல் பிரதிவாதி, உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908, பிரிவு 96–ன் கீழ் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு R.F.A.No.494 of 2016–ல் 22/மார்ச்/2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிற்கு விதிவிலக்கு பெற்று.

3. 1வது எதிர்மேல்முறையீட்டாளர்– அசல் வழக்கின் வாதி ஆனவர், (Page–4) பெங்களூர், பெங்களூர் தெற்கு தாலுக்கா, கில்கெனஹல்லி கிராமத்தில் தாக்கலாகி வரும் சர்வே எண்கள் 56, 57 மற்றும் 60, என்.எஸ். பால்யா கிராமத்தில் தாக்கலாகி வரும் சர்வே எண்கள் 61, 71 மற்றும் 72, பி.டி.எம். லேயவுட் நில எண் 28 ஆனது 1வது எதிர் மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி வழக்குச் சொத்து என்று குறிப்பிடப்படும். வழக்குச் சொத்தான பி.டி.எம். லேயவுட் சைட் எண் 28 –க்கு தன்னை உரிமையாளர் என்று விளம்புகை செய்யுமாறு (தற்பொழுது பெங்களூரு) பெங்களூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளார். உரிமையாளர் என விளம்புகை கோருதல் தவிர, வழக்குச் சொத்தில் மேல்முறையீட்டாளர் எழுப்பிய கட்டுமானம் சட்ட விரோதமானது என்றும், ஆகையால் அந்த கட்டுமானத்தை நீக்குவதற்கான

தீர்ப்பாணை பிறப்பிக்குமாறும் கோரினார். இம்மேல்முறையீட்டின் மற்ற இரு எதிர் மேல்முறையீட்டாளர்களும், முறையாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஆவர். பெங்களூர் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் கற்றறிந்த நீதிபதி, அவரது 19, செப்டம்பர் 2015 தேதியிட்ட உத்தரவு மற்றும் தீர்ப்பாணை வாயிலாக, 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் விளம்புவகை தீர்ப்பாணை வழங்கியுள்ளது. மேல்முறையீட்டாளர் மற்றும் 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆகியோர் வழக்குச் சொத்தில் உள்ள கட்டுமானத்தை நீக்கவேண்டும் என்று கூட தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. வழக்குச் சொத்திற்குள் நுழையவும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் அமைதியான அனுபோகத்தில் தலையிடவும்; மேல்முறையீட்டாளர் மற்றும் 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆகியோர் நிரந்தர தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. தீர்ப்புரையின் 20ம் பத்தியில், அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்ட பிறகும் மேல்முறையீட்டாளரும் 2ம் எதிர்மேல்முறையீட்டாளரும் ஆஜராகவில்லை என்பதையும், எதிர்த்து வழக்கை நடத்தவில்லை என்பதையும் கற்றறிந்த நீதிபதி கவனத்தில் கொண்டார். எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் வாயிலாக உயர்நீதிமன்றமும் தகுதியின் அடிப்படையில் தீர்ப்பாணையை சரியானது என்று உறுதி செய்தது.

4.மேல்முறையீட்டிற்கு ஆதரவாக, தீர்ப்பாணையில் காணப்படும் நியாயமான சங்கதிகளை காட்டிலும், மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் ஸ்ரீ ஆனந்த் சஞ்சை எம்.நுலி; வழக்கின் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ள மேல்முறையீட்டாளரின் முகவரி தவறானது என்றும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது மேல்முறையீட்டாளர் வேறு முகவரியில் வசித்து வந்ததாகவும் வாதிட்டார். ஆகவே, அழைப்பாணைக்கள் மேல்முறையீட்டாளர்களுக்கு முறையாக சார்வு செய்யப்படவில்லை.

5. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழ் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கரவு செய்ய கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத்தில் மட்டுமே தனக்கு சார்வு செய்யப்பட வேண்டிய அழைப்பாணைகளின் தோல்வி குறித்து கிளர்ச்சி எழுப்ப முடியும் என்ற தவறான அடிப்படையில் உயர்நீதிமன்றம் செயல்பட்டது என மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். வழக்கு பதிவுகளின் படி அழைப்பாணையானது மேல்முறையீட்டாளருக்கு சார்வு செய்யப்படவில்லை, மற்றபடி அவருக்கு எதிராக ஒருதலைபட்ச விசாரணையை தொடர்வது சட்ட முரணானது என்று மேல்முறையீட்டாளர் சுட்டிக்காட்டலாம் என்று மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். மேலும், பல வருடங்களுக்கு முன் வழக்குச் சொத்தில் தரை

தளம் மற்றும் 4 தளங்கள் கட்டப்பட்டுள்ள பல அடுக்குமாடி கட்டிடமானது மேல்முறையீட்டாளரால் கட்டப்பட்டது, தற்போது கிரையம் பெற்றவர்களின் அனுபோகத்தில் அது உள்ளது என்பதையும் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட தரப்பினர்களை சேர்க்கும் கோரிக்கை வாயிலாக அறியலாம் என்றும் வாதிட்டார். வழக்குச் சொத்தை வாங்கியவர்களை தரப்பினர்களாக சேர்க்காமலேயே, வழக்குச் சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை இடிக்குமாறு மிகக் கடுமையான தீர்ப்பாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே, விசாரணை நீதிமன்ற தீர்ப்பாணையை நீக்கரவு செய்வதோடு, விசாரணைக்காரி வழக்கை திரும்ப அனுப்புமாறு வலியுறுத்தினார்.

6. 3ம் எதிர் மேல்முறையீட்டாளரான பெங்களூர் மேம்பாட்டு அதிகாரி (Bangalore Development Authority) தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் என்றும், 1ம் எதிர் மேல்முறையீட்டாளருக்கு தான் வழக்குச் சொத்தானது 3ம் எதிர் மேல்முறையீட்டாளரால் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் 1ம் எதிர் மேல்முறையீட்டாளர் / வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு அரவிந்த் காமத் வாதிட்டார். மேலும் மேல்முறையீட்டாளர் உரிமை கொரி தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணம் வேறு சொத்திற்கானது, அதை ஆவணத்தின் சொத்து விவரத்தில் காணலாம் என்று சமர்ப்பிக்கப்பட்டது .

ஒருதலைப் பட்ச தீர்ப்பாணையை தகுதியின் அடிப்படையில் மட்டுமே எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யலாம் என, கற்றறிந்த வழக்கறிஞர் பானுகுமார் ஜெயின் எதிர் அர்ச்சனா குமார் மற்றும் ஒருவர் (2005) 1 எஸ்சிசி 787 என்ற வழக்கின் தீர்ப்புரையை அவரது வாதத்திற்கு ஆதரவாக சுட்டிக்காட்டினார். அவர் தனக்கு அழைப்பாணை சார்வாகவில்லை என்ற அடிப்படையிலோ, நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் இருப்பதாலோ, தீர்ப்பாணையை எதிர்க்க விரும்பினால், அவருக்கான பரிகாரம் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழ் மனு தாக்கல் செய்வது மட்டுமே. இந்நீதிமன்றத்தின் வேறு தீர்ப்பான; பிவ்சந்த்ரா சங்கர் மோர் எதிர் பாலு கங்காராம் மோர் மற்றும் பலர் (2019)6 எஸ்சிசி 387 என்ற வழக்கில் பானு குமார் ஜெயின் வழக்கின் தீர்வு பின்பற்றப்பட்டது என்று வாதுரைத்தார். தோன்றாத் தரப்பினராக அறிவித்து வழங்கிய உத்தரவை நீக்கரவு செய்யுமாறு விண்ணப்பம் தாக்கல் செய்யவில்லை, அழைப்பாணை சார்வாகவில்லை என்ற அடிப்படையில் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய மேல்முறையீட்டாளருக்கு வழிவகை இல்லை என்று வாதிட்டார். எதிர் மேல்முறையீட்டாளர் தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் என்றும், வழக்குச் சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடம் சட்ட விரோதமானது என்றும் விசாரணை

நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் கண்டறிந்துள்ளதாகவும் கூறினார். ஆக இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கற்றறிந்த வழக்கறிஞர் வலியுறுத்தினார்.

7. வாதங்களை நன்கு பரிசீலனை செய்ததில், முதலாவதாக, அசல் வழக்கில் பிரதிவாதியை தோன்றாத் தரப்பினராக அறிவித்து வழங்கிய தீர்ப்புரைக்கு எதிராக, அவரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 96–ன் கீழ் செய்யப்பட்ட மேல்முறையீட்டின் நோக்கத்தை கையாளுகையில் இந்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு பானுகுமார் ஜெயின் என்ற வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கரவு செய்யுமாறு பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட கட்டளை 9 விதி 13–ன் கீழான மனுவை விவாதித்தது. அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவின் பேரில் கூட ஒரு மேல்முறையீடு செய்யப்பட்டது, அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 96–ன் கீழ் மேல்முறையீடானது அப்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டின் பொருண்மையும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பொருண்மையும் ஒன்றுதான் என்று இந்நீதிமன்றத்தில் கூறப்பட்டது, இணையாக இரு

நடவடிக்கைகளை ஒரே நேரத்தில் தொடர அனுமதிப்பது பொது கொள்கைக்கு எதிரானது. தீர்மானத்தின் 23 ம் பத்தியில், உவிமுச., கட்டளை 9 விதி 13 ன் கீழான மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், ஒருதலை பட்ச தீர்ப்பாணைக்கு எதிரான மேல்முறையீடு விசாரணைக்கு உகந்ததா என்ற கேள்வியை இந்நீதிமறம் எழுப்பியது. தீர்மானிக்கப்பட்ட அவ்வழக்கின் 24 முதல் 27 வரையிலான பத்திகள் கவனத்தில் கொள்ளப்பட்டன:

"24. பிரிவு 96(2)–ன் கீழான ஒருதலை பட்ச தீர்ப்புரைக்கு எதிரான மேல்முறையீடு பின்வரும் காரணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படலாம்

(i) வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் ஒருதலை பட்ச நடைமுறையில், பதிவுறுவில் கொண்டுவரப்பட்ட சான்றாவணங்கள் தனக்கு ஆதரவாக தீர்ப்பாணைணை பெற அவரை தகுதியுற செய்யாது, மற்றும்

(ii) அவ்வழக்கை ஒருதலைபட்ச விசாரணையின் கேட்புகைக்கு ஒத்திவைத்திருக்கக்கூடாது.

25. ஆயினும், கட்டளை 9 விதி 13–ன் கீழான விண்ணப்பத்தில், சரித்தன்மை குறித்த வினா எழுப்புவதை தவிர அல்லது ஒருதலை பட்ச விசாரணைக்காக வழக்கை ஒத்தி வைத்த உத்தரவு, குறிப்பிட்ட தேதியில் விசாரணையின் போது ஆஜராக தவறியதற்கான நியாயமான மற்றும் போதுமான காரணங்கள் இருப்பதாக வாதிடுவதற்கு பிரதிவாதி தகுதியுடையவராவார்.

26. ***ஒருதலை பட்ச தீர்ப்பாணை வழங்கப்பட்ட பின், பிரதிவாதி (மறு ஆய்வு மனு தாக்கல் செய்வதின்றி மற்றும் ஒருதலை பட்ச தீர்ப்பாணை மோசடியானது என்ற அடிப்படையில் அதனை நீக்கரவு செய்யுமாறு வழக்கு தாக்கல் செய்தல்) இரு தெளிவான வாய்ப்புகள் உள்ளன, ஒன்று, மேல்முறையீடு தாக்கல் செய்தல், மற்றொன்று உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழ் நீக்கரவு செய்யுமாறு வேண்டி விண்ணப்பம் தாக்கல் செய்தல். அவர் ஒரே சமயத்தில் இரு நடவடிக்கையும் மேற்கொள்ளலாம், இருப்பினும் மேல்முறையீடு நிராகரிக்கப்படுமாயின், விசாரணை நீதிமன்றத்தால் பகரப்பட்ட ஒருதலைபட்ச ஆணை, மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுடன் இணைந்துவிடும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் –ல் காணப்பட்ட விளக்கத்தின் படி,***

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழான மனு நிலைக்கத்தக்கதல்ல. ஆயினும், மேற்கண்ட வகையத்தில் அளிக்கப்பட்ட விளக்கம், எதிர்நிலையும் சரியானத என்று பரிந்துரைப்பதற்காக அல்ல.

27. உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 96–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், பிரிவு 105 பொறுத்து, சரித்தன்மை குறித்து வாதிட மேல்முறையீட்டாளருக்கு அனுமதி உள்ளது அல்லது பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவு, அதில் வகுத்துரைக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு"

[வலியுறுத்தப்பட்டது]

ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்கு எதிரான உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 96–ன் கீழான மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டாலும், ***உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழான மனு விசாரணைக்குகந்ததாகாது,*** தோல்வியுற்ற பிரதிவாதி இரு தீர்வுகளையும் ஒருசேர பெற எவ்வித தடையும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது. அத்தகைய நிலையில், தீர்ப்பாணைக்கு எதிராண முறையான மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுமாயின், ***உரிமையியல் நடைமுறைச்***

சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழான மனுவை கட்டாயம் தொடர இயலாது.

ஏனெனில் ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்கு எதிரான மேல்முறையீடு, திரும்ப பெற்றதாக இல்லாமல் வேறு எந்த காரணத்தின் அடிப்படையிலோ மேல்முறையீடு முடித்து வைக்கப்பட்டிருப்பின், ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கரவு செய்வதற்கான விண்ணப்பம் தாக்கல் செய்ய இயலாது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13 வகையறை செய்துள்ளது. ஆயினும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ஆன விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டால், வெளிப்படையாக குறிபிட்ட விதி ஏதும் உரிமையில் சட்டத்தில் இல்லாத நிலையில்; தீர்ப்பாணைக்கு எதிராக பிரிவு 96 ன் கீழ் பிரதிவாதி மேல்முறையீடு தாக்கல் செய்யும் உரிமையை பறிக்க இயலாது. மேற்கூறிய முடிவின் பத்தி 38–இல், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13 ன் கீழான விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டவுடன், சரிதன்மை குறித்தோ அல்லது ஒருதலைபட்ச விசாரணைக்கு ஒத்தி வைத்தது குறித்தோ மற்றும் அல்லது தோன்றாமைக்கான போதுமான காரணத்தையோ வாதிட பிரதிவாதிக்கு அனுமதி வழங்க கூடாது என இந்நீதிமன்றம் தீர்மானித்தது.

8. இவ்வழக்கில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழ் பிரதிவாதி பரிகாரம் பெறாத நிலையில், விசாரணை நீதிமன்றத்தின் ஒருதலைபட்ச நடைமுறை நியாயமற்றது என்று தீர்புரைக்கு எதிரான சாதாரண மேல்முறையீட்டில் கிளர்ச்சி எழுப்ப அவருக்கு அதிகாரம் உள்ளதா என்பதே கேள்வியாகும். அந்நிலையில், விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதற்கான தகுந்த காரணம் உள்ளது என்பதை நிரூபிக்க ஆதாரத்தை மேல்முறையீட்டில் முன்னிலைப்படுத்த மேல்முறையீட்டாளருக்கு உரிமை இல்லை என்றாலும், அறிவிப்பு சார்வாகி இருந்தாலும், சார்வாகாவிடினும் வழக்கு பதிவுகளின் அடிப்படையில் அவர் எப்போதும் வாதிடலாம், அவருக்கு எதிரான விசாரணை நீதிமன்றத்தின் தோன்றாத் தரப்பினர் நடைமுறை நியாயப்படுத்தவில்லை (the trial court was not justified in proceeding ex parte against him). பிரிவு 105–ன் கீழான காரணத்திற்காக, தீர்ப்பாணையை மேல்மூறையீடு செய்யகையில், ஏதேனும் பிழைகள், குறைபாடு அல்லது உத்தரவில் வழக்கின் முடிவை பாதிக்கும் வகையிலான ஏதேனும் ஒழுங்கினமை குறித்து மேல்முறையீட்டின் அடிப்படை குறிப்புரையில் சுட்டிக்காட்டலாம். இவ்வாறான வழக்கில், வழக்கின் முடிவைப் பாதிக்கும் வகையில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிறப்பிக்கப்பட்ட

இடைக்கால அல்லது இடைநிலை உத்தரவு சட்டவிரோதமானது என்ற தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு செய்பவர் எப்போதுமே மேல்முறையீடு செய்ய வலியுறுத்தப்படலாம். எனவே, மேல்முறையீட்டாளர் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை எதிர்த்து, மேல்முறையீடு தாக்கல் செய்யும் போது, தனக்கு எதிரான எதிர்தரப்பினர் அல்லா வழக்கைத் தொடர பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சட்டவிரோதமானது என்பதை விசாரணை நீதிமன்றத்தின் பதிவிலிருந்து எப்போதும் சுட்டிக்காட்டலாம். பானு குமார் ஜேயின் என்ற வழக்கில் தீர்மானித்துள்ளபடி, உவிமுச கட்டளை IX இன் விதி 13 ன் கீழ் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் மட்டுமே, அத்தகைய பிரதிவாதியால் எதிரவரல்லாத தீர்ப்பாணையை எதிர்த்த மேல்முறையீட்டில், வழக்கு எதிரவரல்லா நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது சட்டவிரோதமானது அல்லது தவறானது என்று கூறமுடியாது.எது எவ்வாறாயினும், இவ்வழக்கில், கட்டளை 9 விதி 13–ன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே, அத்தகைய வாதத்தை அவர் முன்வைக்கலாம்.

9. தற்போது இந்த வழக்கின் பொருண்மைகள் குறித்து விவாதிக்கையில், மேல்முறையீட்டாளர் மற்றும் இரண்டாவது பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட அழைப்பாணை அவர்களின் உரிய இடங்கள்

பூட்டப்பட்டிருந்தன என்ற குறிப்புடன் சார்வு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டதாக 27 அக்டோபர் 2014 தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு தாளில் ஒரு குறிப்பு இருப்பதைக் காணலாம். எது எவ்வாறு இருப்பினும், ஒப்புகை அட்டையுடனான பதிவு அஞ்சல் வாயிலாக அழைப்பாணைகளை அதே முகவரிக்கு அனுப்புமாறு 5/ஜனவரி/2015 அன்று விசாரணை நீதிமன்றமானது உத்தரவிட்டுள்ளது. 5/மார்ச்/2015 தேதியிட்ட உத்தரவுத் தாளின் பதிவுகள்படி, மேல்முறையீட்டாளருக்கும் 2 ம் எதிர் மேல்முறையீட்டாளருக்கும் அனுப்பப்பட்ட தபால் வாயிலான அழைப்பாணைகள் ஆனது, "தகவல் சார்வு செய்யப்பட்டது" என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது. மேல்முறையீட்டாளரின் இருப்பிடம் பூட்டப்பட்டு இருந்ததால் அழைப்பாணைகள் சாதாராண வகையில் சார்வு செய்யும் முயற்சிகள் தோல்வியடைந்தன என பதிவேடுகள் சுட்டிக்காட்டுகின்றன. கட்டளை 5 விதி 17–ன் படி; மேல்முறையீட்டாளர் வசித்து வரும் வீட்டின் வெளிப்புற கதவில் அழைப்பாணையின் நகலை ஒட்டுமாறு விசாரணை நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கவில்லை. மேல்முறையீட்டாளர் முகவரி காண்பிக்கப்பட்டபடி சரியானதா என சரிபார்க்காமல், ஒப்புகை அட்டையுடன் தபால் வாயிலான அழைப்பாணை சார்வு செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எங்கள்

கருத்தின் படி, மேல்முறையீட்டாளருக்கு எதிரான ஒருதலை பட்ச உத்தரவு பின்பற்றப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

10. அதுமட்டுமின்றி, வழக்குச் சொத்தில் தரை தளம் கூடுதலாக 4 தளங்களை கொண்ட பல அடுக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும், மற்ற தரப்பினர்கள் வாயிலாக வழக்குச் சொத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு பகுதிகளில் வெவ்வெறு நபர்கள் அனுபோகத்தில் உள்ளனர் என்பதையும் நாங்கள் அறிகிறோம். முன்பே கவனத்தில் கொண்டபடி, வழக்குச் சொத்தில் உள்ள கட்டிடத்தை இடிக்குமாறு தீர்ப்பாணையானது பகரப்பட்டுள்ளது. வழக்கை திரும்ப அனுப்புவதற்கான வேண்டுரையை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கு அதுவும் ஒரு காரணமாகும். இவ்வழக்கானது 2014 ம் ஆண்டில் தொடரப்பட்டது. வழக்கை விசாரணை நீதிமன்றத்திற்கே திரும்ப அனுப்ப உத்தரவிடுவதன் விளைவாக, 1ம் எதிர்மேல்முறையீட்டாளரால் தொடரப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட காலத்தாமதம் ஏற்படலாம். ஆகவே மேல்முறையீட்டாளருக்கு கணக்கீடுகளின் படி ரூ.2,00,000/– (இரண்டு லட்ச ரூபாய்) கட்டணமாக விதிக்கப்படுகிறது. கட்டிடத்தில் வசிப்பவர்கள் இவ்வழக்கின் அவசியமான தரப்பினரா என்று நாங்கள் எவ்வித குறிப்பும் செய்யாவிடினும், வழக்குச் சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் அனுபோகத்தில் உள்ள நபர்களை

தரப்பினராக சேர்க்க 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் விரும்பினால்; அது தொடர்பான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

11.அதன்படி, இந்த மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. 22/3/2016 தேதியிட்ட உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மற்றும் பெங்களூர் மாநகர உரிமையியல் நீதிமன்ற கற்றறிந்த நீதிபதியின் 19/9/2015 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஆகியன நீக்கரவு செய்யப்படுகின்றன. அசல் வழக்கு எண்.6610 /2014 ஆனது, பெங்களூர் மாநகர உரிமையியல் நீதிமன்ற கோப்பிற்கு மீட்டளிக்கப்படுகிறது.

12. வழக்கின் தரப்பினர்கள் 26/9/2022 அன்று காலை 10.30 மணிக்கு பெங்களூர் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் கற்றறிந்த முதன்மை நீதிபதி முன்பு முன்னிலையாக வேண்டும். மாநகர உரிமையியல் நீதிமன்ற முதன்மை நீதிபதிக்கு இவ்வழக்கை தீர்வு செய்வதற்காக ஏதேனும் மாநகர உரிமையியல் நீதிமன்ற நீதிபதிக்கும் மாற்றி உத்தரவிட அனுமதியுள்ளது. மேல்முறையீட்டாளர் 26/9/2022–லிருந்து அதிகபட்சமாக ஒரு மாத காலத்திற்குள் தனது எதிர் வழக்குரையை தாக்கல் செய்ய வேண்டும். எச்சூழலிலும், எதிர்வழக்குரையை தாக்கல் செய்யத்

தேவையான அவகாசம் மேல்முறையீட்டாளருக்கு நீட்டித்து வழங்கப்படலாகாது. இவ்வழக்கு 2014 ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்பதை கருத்தில் கொள்கையில், விசாரணை நீதிமன்றம் இவ்வழக்கை முடித்து வைக்கை தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

13. 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் கணக்கீடுகளின் படி ரூ.2,00,000/– (இரண்டு லட்ச ரூபாய்) செலவுத் தொகையை மேல்முறையீட்டாளரிடம் இருந்து பெற உரிமையுடையவர். இந்த செலவுத் தொகை செலுத்த முன் நிபந்தனையாக இருக்கும். மேல்முறையீட்டாளர் நேரடியாக செலவுத் தொகையை 1ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு செலுத்துவதோடு, அன்றிலிருந்து 4 வாரத்திற்குள் இரசீதை சமர்பிக்கவேண்டும் அல்லது இன்றிலிருந்து நான்கு வாரங்களுக்குள் செலவுத் தொகையை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.

மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."